சென்னை – 6 கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : முனைவர். திரு. சி. பூரணசந்திரன், எம்.சி.ஏ, எம்.பில், பி.எச்.டி.,

---

ந.க.எண். 14390/பி1/2021 நாள்.19.07.2021

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் – ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டது– சென்னை –06, கல்லூரிக் கல்வி இயக்ககம், இளநிலை உதவியாளர், திரு.செ.சு.பிரவீன்குமார்– பணியினை வரன்முறைப்படுத்துதல் – ஆணை வழங்குதல்.

பார்வை: அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 26.02.2021

------

திருவண்ணாமலை, அரசு கலைக் கல்லூரியில் கண்காணிப்பாளராகப் பணியாற்றி பணியிலிருக்கும் காலத்தில் **11.12.2016** அன்று இயற்கையெய்திய திருமதி. மு. செல்வராணி என்பவரின் மகனான திரு. செ.சு.பிரவீன்குமார் என்பவருக்கு இவ்வலுவலகத்தில் பணி நியமனம் வழங்கப்பட்டு **06.12.2017** முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் பிறந்த தேதி **19.01.1991** என்றும், பணிநியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளதாலும், இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயதினை நிறைவு செய்துள்ளதாலும், அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயது வரம்பிற்கோ விதித் தளர்வாணைகள் பெற வேண்டிய நிலை எழவில்லை.

02.02.2016 முதல் **31.12.2019** வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்ய சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, திரு. செ.சு.பிரவீன்குமார் என்பார் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த **06.12.2017** முற்பகல் முதல் அன்னாரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

<u>பெறுநர்</u>

திரு.செ.சு.பிரவீன்குமார்,
இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)

<u>நகல்</u>

1.இயக்கக'எ' பிரிவு
2.இருப்புக் கோப்பு
3. உபரி நகல்